24.09.2025. R.R.L.A.O.P. No.54 of 2021 P.W.1 - Velmurugan

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் ஆவணங்கள்படி எனக்கு தெரியும். இரயில்வே சுரங்கப்பாதைக்காக இடம் கையகப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். சுரங்கப்பாதை பக்கத்தில் மேல் ஆலத்தூர் இரயில்வே நிலையம் உள்ளது என்றால் சரிதான். சுரங்கப்பாதை பக்கத்தில் இந்தியன் வங்கி, பெட்ரோல் பேங்க், EB Office ஆகியவைகள் உள்ளது என்றால் சரிதான். Interim Award ல் 13 ஆவணங்களை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த 13 ஆவணங்களில் 85 ரூபாய் 3 காசு–லிருந்து 87 ரூபாய் 45 காசுகள் வரை ஒரு சதுர அடிக்கென்று அந்த ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான்.

இடைக்கால தீர்ப்பில் மாதிரி நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு சதுரடிக்கு 89.97 ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஒரு சதுரடிக்கு ரூபாய் 90 என்று Guideline Value உள்ளது என்றால் சரிதான். அரசு வழிகாட்டி மதிப்பு 90 ரூபாய் என்று இருந்தாலும் ஒரு சதுரடிக்கு அரசு வழிகாட்டி மதிப்பின்படி ரூபாய் 90 எடுத்துக்கொள்ளாமல் ரூபாய் 89.97 மட்டும் ஒரு சதுரடிக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு இடைக்கால உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆவணப்படி சரிதான். இறுதி உத்தரவில் மாதிரி நிலம் எதுவும் தேர்வு செய்யவில்லை என்றால் சரிதான்.

மூன்று பஞ்சாயத்துகளில் அந்த நிலங்கள் இருந்தாலும் அது தொடர்ச்சியாகத்தான் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள Reference–ல் மேல்முட்டுக்கூர் கிராமத்தில் மாதிரி நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஆவண எண் 7253/2012 என்ற ஆவணத்தில் சதுரடி ரூபாய் 70.17 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வழிகாட்டி மதிப்பு ரூபாய் 100 என்று உள்ளது என்றால் சரிதான்.

புதிய நில எடுப்பு சட்டம் பிரிவு 26ன் படி அரசு வழிகாட்டி மதிப்பை நிர்ணயம் செய்யாமல் சந்தை மதிப்பை தான் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் சர்வே எண் 271 (ம.த.சா.ஆ.2)–ல் 2A1, 2C1, 2D1 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே எண் 271/2A1–ல் சதுர மீட்டருக்கு ரூபாய் 1223.17 என இறுதியாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Airline land சர்வே எண் 271/2B1 பக்கத்து நிலம் என்றால் சரிதான். அதற்கு ஒரு சதர மீட்டருக்கு ரூபாய் 74.15 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சர்வே எண் 271/2C1 பக்கத்து நிலம் என்றால் சரிதான். அதற்கு ஒரு சதர மீட்டருக்கு ரூபாய் 968.22 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதி உத்தரவில் பொதுவாக Award தொகையிலிருந்து 1.25 ஆல் பெருக்கி அதில் வரும் தொகையைத்தான் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இடைக்கால் உத்தரவிலிருந்து இறுதி உத்தரவு வரை 15 சதவீத வட்டி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைக்கால உத்தரவை பிறப்பித்தவர் சரியான முறையில் விதிமுறைகளை பின்பற்றி இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அவர் சரியாக உத்தரவு பிறப்பிக்கவில்லை. அப்போதைய மார்க்கட் மதிப்பின்படி விலை நிர்ணயம் செய்யாமல் தவறான முறையில் விலை நிர்ணயம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இறுதி உத்தரவில் எந்தவித ஆவணங்களையும் பரிசீலனை செய்ததாக சொல்லப்படவில்லை என்றால் பரிசீலனை செய்துள்ளார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2025.09.24 17:07:01 +0530